සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/6/EP/06/2018. செ.பா.திட். | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ........................ | දිනය<br>திகதி<br>Date | 2018.03.29 |
|---|---|---|---|---|---|

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2018/02**

சகல மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி / மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்

**<u>தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2018, 14021 தொழில் முயற்சியாளர்கள்</u>**

அபிவிருத்தியும் 14021 புதிய தொழில் முயற்சியாளர்களை புதிதாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும். (கிராம சேவகர் பிரிவு ஒன்றுக்கு இருவர் வீதம்)

நிலைபேரான ஒரு யுகம் என்ற தேசிய கொள்கைக்கு ஏற்ப தேசிய மட்டத்திலான இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ளும் போது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைத்துள்ள முக்கிய பொறுப்பானது வறுமையினை ஒழிக்கும் பொருட்டு இவ்வாறான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து சமுர்த்தி பயனாளி குடும்பங்கள் 125000 ஐ வருடாந்தம் கூடிய வருமானம் பெறும் குடும்பங்கள் உருவாக்குவதாகும்.

எமது நாட்டின் தொழில் பிரச்சினைத் தீர்ப்பதற்கும் வறிய மக்களை வறுமையில் இருந்து மீட்பதிலும் உள்ள மிக பொருத்தமான செயற்பாட்டு முறையானது தொழில்முயற்சி அபிவிருத்தியாகும் என்பதனால் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் இதுவரையில் செயற்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் பிரிவு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி அபிவிருத்தியினை இலக்காகக் கொண்ட தொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பிரதான மூன்று வேலைத்திட்டங்களின் கீழ் சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

1) தொழில் முயற்சி அபிவிருத்தியின் பொருட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒருவர் வீதம் பயிற்றுனர்களை உருவாக்கக்கூடிய வளவாளர்களை (TOTS) அபிவிருத்தி செய்தல்.

2) சிறிய மற்றும் நடுத்தர அறவிலான 14021 தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தல்.

3) புதிய தொழில் முயற்சியாளர்களை 14021 பேரை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒருவர் வீதம் பயிற்றுவித்தலும் வர்த்தகத்தை ஆரம்பிப்பதற்கு ஊக்குவித்தலும்

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

**தொழில் முயற்சி அபிவிருத்தியின் பொருட்டு பொருத்தமான பயிற்றுனர்களை உருவாக்கக்கூடிய வளவாளர்களை அபிவிருத்தி செய்தல்.(TOT)**

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகத் துறை தொடர்பில் கவனத்தினை செலுத்தும் போது தொழில் முயற்சி அபிவிருத்தி விடயம் தொடர்பில் அறிவும், பயிற்சியும் உள்ள பயிற்றுனர்கள், வளவாளர்களின் தேவைப்பாடு ஒன்றுள்ளது. மேற்சொன்ன தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு பயிற்றுனர்கள் 500 பேரையும் தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பிலான ஆலோசனைகளின படி 1074 பேரையும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்றுனர்கள் TOT (500) பேரை பயிற்சியளிப்பது மனிதவள பிரிவின் மூலம் மேற்கொள்வதற்கு ஏற்கனவே) திட்டமிடப்பட்டுள்ளதுடன் ஆலோசகர்களாக செயற்படுவதற்கு விருப்பத்தினை உடைய கீழே குறிப்பிடப்படும் ஆற்றல்களையும் திறமைகளையும் கொண்டுள்ள சமுர்த்தி முகாயைமாளர்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் இதன் பொருட்டு முன்வரமுடியும். இதற்காக தங்களது மாவட்டத்தில் கீழே குறிப்பிடப்படும் தகுதிகளை உடைய உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியலை தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவுக்கு 2018 ஜுன் மாதத்திற்கு முன்னர் வழங்குதல் வேண்டும்.

1. பயிற்றுனர் ஒருவராக செயற்படுவதற்கான ஆற்றல் இருத்தல்.

2. வர்த்தக துறை தொடர்பில் அனுபவங்களைப் பெற்றிருத்தல்.

3. வர்த்தக ஆலோசனைகள் விடங்கள் தொடர்பில் விருப்பமும் ஊக்கமும் திறமையும் அத்தோடு அனுபவத்தினையும் பெற்றிருத்தல்.

4. பிற விஷேட திறமைகள் அதன் பிரகாரம் இதற்காக முன்வரும் உத்தியோகத்தர்களை NEDA, SIYB, YOU - LEAD ஆகிய நிறுவனங்களின் வளப்பங்களிப்புடன் 2018 ஆகஸ்ட் 31ம், முன்னர் பயிற்சிகளை வழங்கி பூர்த்தி செய்து அவர்களின் சேவையினை சமுர்த்தி தொழில் பயிற்சியாளர்களுக்கு வழங்க எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**(2) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 14021 தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துதல்.**

இவ் வாண்டிற்குள் 14021 சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கு இலக்கிடப்பட்டுள்ளதனால் ஏற்கனவே ஏதேனும் கருத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்து நடாத்திச் செல்கின்ற தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களது கருத்திட்டங்களை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு தேவையான கீழ் உள்ள வேலைத்திட்டங்களை செயற்படுத்த உத்தேசித்துள்ளது.

2:1 அவர்களது பிரச்சினைகளை சரியாக இனங்காண்பதும் பகுப்பாய்வு செய்வதும்.
2:2 கருத்திட்டத்தின் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு.
2:3 விற்பனை வாய்ப்புக்களை உருவாக்கஞ் செய்தல்.
2:4 விஷேட வேலைத்திட்டங்கள்

2:5 முன்னேற்ற மீளாய்வு

**2:1 அவர்களது பிரச்சிணைகளை இனங் காண்பதும் பகுப்பாய்வு செய்வதும்.**

**2:1:1 சமுர்த்தி தொழில் முயற்சி தேசிய சம்மேளனம்.**

2016 மற்றும் 2017 ம் ஆண்டுகளில் வழங்கிய 3 ஆலோசணைகளின் பிரகாரம் ஏற்கனவே பிரதேச தொழில் முயற்சியாளர்களைச் சங்கம் மற்றும் மாவட்ட தொழில் முயற்சியாளர்கள் சங்கத்தினை உருவாக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நாடுபூராகவும் உருவாக்கப்பட்டுள்ள வர்த்தக சங்கங்களின் எண்ணிக்கையானது 351 மட்டமானதாகும்.

இச் சங்கங்களை ஆரம்பிப்பதன் முக்கிய குறிக்கோள்களானது குறைந்த வருமானம் பெறுவோராக சமுர்த்தி வேலைத்திட்டத்தோடு செயற்பாட்டு ரீதியான தொடர்பபட்டு மற்றும் அதன் நன்மைகளை பெற்றுக்கொண்டு தனது வாழ்வாதாரமாக வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் / தொழில் முயற்சியாளர்களை பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக நிலைபேறான விதத்தில் வலுவூட்டச் செய்து தேசிய மட்டத்திற்கு அறிமுகப்படுத்துவதாகும். அதன் ஒரு கட்டமாக சமுர்த்தி தொழில் முயற்சியாளர் தேசிய சம்மேளனம் இவ்வாண்டின் யூன் மாதத்திற்குள் கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது அதன் பொருட்டு

- ❖ பிரதேச தொழில் முயற்சி சங்கத் தலைவர்கள் - 331
- ❖ மாவட்ட தொழில் முயற்சி சங்கத் தலைவர்கள் - 25
- ❖ தேசிய மட்டத்தில் முக்கிய வர்த்தகர்கள்
- ❖ வர்த்தகம் மற்றும் தொழில் முயற்சி துறையில் வளவாளர்கள் மற்றும் புத்தி ஜீவிகள் அத்துடன்.
- ❖ அரசாங்க நிறுவனங்களினது பிரதிநிதிகளினது தலைமையில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது அதன் பொருட்டு வர்த்தக சங்க அங்கத்தவர்களை கலந்து கொள்ளச் செய்யும் முன்னர் ஆயத்தம் ஒன்றினையும் மற்றும் விழிப்பூட்டல் மேற்கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டுகின்றேன்.

**2:1:2 சமுர்த்தி தொழில் முயற்சி ஆய்வு.**

சமுர்த்தி வேலைத்திட்டத்தோடு செயற்பாட்டு ரீதியான தொடர்புகொண்டு அதன் நன்மைகளை பெற்றுக் கொண்டு தனது வாழ்வாதாரமாக வர்த்தகத்தில் ஈடுபடும் வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்கள் உட்பட வர்த்தகநடவடிக்கைகளில் பின்தங்கிய நிலைக்குள்ளான வர்த்தகர்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே உருவான தொழில் முயற்சியாளர்கள் அதிகமானோர் நாடுபூராகவும் வியாபித்து இருப்பதுடன் அதில் 30000 க்கும் மேற்பட்டோர சமுர்த்தி தொழில் முயற்சியாளர் குழு ஒன்றை இவ்வாண்டிற்குள் உட்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்குரிய தகவல்களை சேகரித்தல் மற்றும் தரவுகளை கணனிமயப்படுத்துவதற்குரிய ஆலோசனைகளும் வழிகாட்டல்கள்களும் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் எதிர்காலத்தில் தங்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2:1:3 பயிற்சியினூடாக தொழில் முயற்சி முகாமைத்துவ அறிவு / திறமைகளை விருத்தி செய்தல்.**

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை இனம்கண்டு அவர்களை ஒரே வகையான குழுக்களாக அணி திரட்டுதல், அவர்களது பிரச்சினைகளை சரியாக

இனம்காணுதல், மற்றும் இப்பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளக் கூடிய விதத்தில் அவர்களுக்கு பயிற்சியினையும் தீர்வுகளையும் வழங்குவது இதன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தொழில் முயற்சி ஆலோசகராக பயிற்சியினை பெற்ற பயிற்றுனர்களை பெற்ற பயிற்றுனர்களின் சேவையினை இங்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

அதற்கமைய தொழில் முயற்சி பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்ய வேண்டியது வர்த்தக சங்க அங்கத்துவத்தினை பெற்றுள்ள தொழில் முயற்சியாளர்களின் பயிற்சித் தேவைகளை சரியாக இனங்கண்ட முழுமையாக்குவதற்காகும். என்பதுடன் அது சமுதாய அடிப்படை வங்கி மட்டத்திலோ அல்லது பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலோ தேவைகளின் பிரகாரம் திட்டமிட்டு கொள்ளமுடியும்.

அதன் பிரகாரம் ஒரு பிரதேச செயலகப் பிரிவிற்கு ரூபா 50000/= இற்கான தொகையினை திணைக்கள நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

**2:1:4 சமுர்த்தி உணவகங்களில் உணவு தயாரிப்பு பயிற்சி வேலைத்திட்டங்கள் (மகளிர் தொழில் முயற்சி தொழிலாளர்களை மேம்படுத்துதல்) உணவகங்களை ஆரம்பித்தல்.**

பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கின்ற சமுர்த்தி உணவகங்களில் நச்சுப்பொருட்களற்ற உள்ளூர் உணவு வகைகளை தயாரிப்பதற்கு தேவையான அறிவ, திறமை, மற்றும் உள அபிவிருத்தியினை மேற்கொண்டு அக் குடும்ப அலகுகளில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியினை ஏற்படுத்துவதும் அதன் ஊடாக நிலைபேரான வாழ்வாதார வழியொன்றாக உணவு தயாரிப்புக்கைத்தொழில் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதனை இலக்காகக் கொண்டு இவ் வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன பயிற்சிகளுக்கு கீழ் உள்ள பிரகாரம் பயிலுனர்களை கலந்து கொள்ளச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1. ஏற்கனவே சமுர்த்தி உணவகங்களின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள பிரிவுகளில் தொழில் முயற்சியாளர்களாக செயற்பட முன்வந்துள்ள பெண்கள்.
2. கடந்த ஆண்டில் பயிற்சியின் பொருட்டு விண்ணப்பித்து பயிற்சி வாய்ப்புக்கள் கிடைக்காத உணவகங்களை நிர்மாணித்துள்ள பிரிவுகளின் தொழில் முயற்சியாளர்கள்.
3. சுய தொழில் ஒன்றாக துரித உணவுகளை தயாரிப்பதற்கு விருப்பத்தினை உடைய மற்றும் தொழில் முயற்சி துறையில் பிறவேசிக்க விருப்பமுள்ள இள வயதுப் பெண்கள்.

அதன் பொருட்டு இனங்காணப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**2:2 தொழில் முயற்சி அபிவிருத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்தல்.**

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் கருத்திட்ட மேம்பாட்டினை மேற்கொள்ளும் பொருட்டு தேவையான சிறிய அளவினை குடிசை களஞ்சிய காணிகளை நிர்மாணித்தல், நடமாடும் விற்பனைக் கூடங்கள், நடமாடும் விற்பனை வண்டிகள் உட்பட உற்பத்திகளின் நிலை, தரக் கட்டுப்பாட்டினை மேம்படுத்துவது உட்பட பெறுமதியினை அதிகரிக்க செய்யும் உற்பத்திகளுக்குத் தேவையான இயந்திரப் பொறிகள் மற்றும் உபகரணங்களை வழஙடகும் பொருட்டு திணைக்கள நிதி ஒதுக்கீட்டினை

வழங்குவதற்கு இதன் கீழ் முடியும்.

ஒரு தொழில் முயற்சியாளர்க்கு மேலுள்ள தேவைப்பாடுகளில் ஒரு தேவைப்பாட்டுக்காக நிதி ஒதுக்கீட்டினை வழங்க முடியும் என்பதுடன் திணைக்கள. பங்களிப்பாக 50% மாகஇருத்தல் வேண்டும். எவ்வாறு இருந்தும் அத் தொகையானது உயர்ந்தபட்சம் ரூபா 200000/= என்ற வகையில் நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகப் பிரிவில் கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு அமையவும் இத் தொகையினை சீராக்கஞ் செய்து கொள்ளல் வேண்டும். இங்கு பிரதேச செயலகத்தில் உள்ள் "தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை" தாண்டலாகாது என்பதுடன் ஒரு பிரதேச செயலகப் பிரிவுக்கு ரூபா 200000/= என்ற வகையில் நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகப் பிரிவில் கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு அமையவும் அத் தொகையினை சீராக்கஞ் செய்து கொள்ளல் வேண்டும். இங்கு பிரதேச செயலகத்தில் உள்ள "தேசிய அதிகார சபை" (NEDA) உத்தியோகத்தர்களினால் நேரடி ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**2 : 3 கருத்திட்டங்களின் விற்பனை வாய்ப்புக்களை விரிவாக்கி கொள்ளல்**

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் சந்தை வாய்ப்புக்களை விரிவாக்கஞ் செய்யும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2:3:1: சமுர்த்தி விற்பனை நிலையங்கள் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கட்டி எழுப்பப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி சந்தை வாய்ப்பினை விரிவாக்கஞ் செய்து கொடுக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் சமுர்த்தி விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு 2016/2017ம் ஆண்டுகளில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இவ்வாண்டிலும் சமுர்த்தி விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் முன்னுரிமை வழங்கப்படுவது முன்னைய வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு இருப்பினும் இதுவரை பணிமுடிக்கப்படாத கருத்திட்டங்களின் பணிகளை முடிப்பதற்காகும்.

ஆகையினால் கடந்த இரு வருடங்களில் ஆரம்பித்த் கருத்திட்டங்களின் மேலும் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் பொருட்டு தயாரித்து செலவு மதிப்பீட்டினை தாமதமின்றி தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவுக்கு சமர்ப்பித்து தேவையான நிதி ஒதுக்கீட்டினை கோருதல் வேண்டும். இவ்வாறான கருத்திட்டங்களில் துரிதமாக பணிகளை பூர்த்தி செய்து இவ்வாண்டிலே ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது உரிய மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

அதே போன்று புதிதாக ஆரம்பித்த உத்தேசித்துள்ள கருத்திட்டங்களில் உயர்ந்தபட்சம் ரூபா 8 மில்லியனுக்கு உட்பட்டதாக இரண்டு கருத்திட்டங்களின் பொருட்டு திணைக்கள நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்படும். அதே போன்று ஆரம்பிக்க உத்தேசித்துள்ள கருத்திட்டங்களுக்கு உரியதாக தயாரிகிகப்பட்ட கருத்திட்ட பிரேரனைகளை

மேலதிக பணிப்பாளர் தலைமைஅதிபதி / மாவட்டச் செயலாளரின் சிபாரிசுடன் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவுக்கு சமர்பித்து அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

நடைமுறையிலுள்ள உள்ள நிதி ஒதுக்கீடு எல்லைக்குள் அங்கீகாரம் வழங்கக் கூடியது வரையறுக்கப்பட்ட எண்ணிக்கைகளுக்கு மாத்திரம் என்பதனால் கிடைக்கின்ற கோரிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்படும்.

**2:3:2 சமுர்த்தி விற்பனை நிலையங்கள் / உணவகங்களின் பொருட்டு மூலதன உபகரணங்களை வழங்குவதும் பிரச்சாரமும் (விற்பனை நிலையங்கள்/உணவகங்கள் 10)**

சமுர்த்தி விற்பனை நிலையங்கள் சார்ந்ததாக மற்றும் பிரதேச மட்டத்தில் ஆரம்பிக்கப்படுகின்ற சமுர்த்தி உணவகங்களுக்கு தேவையான மூலதன உபகரணங்களை வழங்குவதற்கும் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகள் இதன் கீழ் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு கருத்திட்டத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பிரச்சாரங்களின் பொருட்டு வழங்கப்படுகின்ற திணைக்கள நிதி ஒதுக்கீட்டு உயர்ந்தபட்ச தொகையானது ரூபா 750,000/= ஆகும் என்பதுடன் தேவையான நிதி ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

2:3:3 சௌபாக்கிய வர்த்தக கண்காட்சியினை ஒழுங்கு செய்தல்.

வர்த்தக கண்காட்சியினை ஒழுங்கு செய்யும் போது அதில் கலந்து கொள்ளும் வர்த்தகர்கள் தற்பொழுதுவரை முகங்கொடுத்து வருகின்ற

- ❖ நிதி / மூலதன பிரச்சினைகள்
- ❖ சந்தைப்படுத்தல் பிரச்சினைகள்
- ❖ முகாமைத்துவ பிரச்சினைகள்
- ❖ தொழிநுட்ப பிரச்சினைகள்

போன்றவற்றினை முன்னதாக அறிந்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் அதன் பொருட்டு தீர்வினை வழங்கக்கூடிய அரசாங்க மற்றும் தனியார் பிரிவின் உதவிச் சேவை நிறுவனங்களுடனான சந்திப்பொன்றினை வர்த்தகக் கண்காட்சி கால எல்லைக்குள் ஒழுங்கு செய்தல் வேண்டும். வர்த்தக் கண்காட்சி / விற்பனை சந்தைகளின் பொருட்டு அதிகளவிலான தொழில் முயற்சியாளர்கள் தொடர்புபடுவதுடன் அவர்களது பிரச்சினைகளை கண்காட்சி / விற்பனை சந்தை நடைபெறும் காலத்திற்குள் தீர்த்து அத்தீர்வுகள் வழங்கப்பட்ட விதத்தினை சாட்சியுடன் எமது பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**2:4 விஷேட வேலைத்திட்டங்கள்**

தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் வருடாந்த செயற்பாட்டு திட்டமிடலில் உள்ளடங்காத இருப்பினும் அத்தியாவசியமாக நிறைவேற்றப்பட வேண்டிய அல்லது காலத்தின் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் அல்லது ஏதேனும் ஒரு கருத்திட்டத்தின் பொருட்டு நிதி ஒதுக்கீட்டினை ஒதுக்குவது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகிறது - இதற்கு கிடைக்கின்ற கோரிக்கைகள் தொடர்பில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**2:5 முன்னேற்ற மீளாய்வு கூட்டம்**

தொழில் முய்றசி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் ஒன்று ஒவ்வொரு ஆண்டுக்கு ஒருமுறை மாவட்ட தொழில் முயற்சி அபிவிருத்தி விடயப் பொறுப்பு முகாமையாளரின் பங்கேற்புடன் சமுர்த்தி அபிவிருத்தி - திணைக்களத்தில் நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்குரிய அறிக்கைகளுடன் விடய முகாமையாளர்கள் கலந்து கொள்ளல் வேண்டும்.

03: 14021 புதிய தொழில் முயற்சியாளர்களை சமுர்த்திக் குடும்பங்களின் இனங்காணுதல், பயிற்றுவித்தல், மற்றும் வர்த்தகத்தினை ஆரம்பித்தல். இளைஞர் யுவதிகள் மற்றும் பெற்றோர்களிடத்தில் புதிதாக விவசாயம், கால்நடைவளர்ப்பு அல்லது மீன்பிடி, கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் ஆகிய எந்தவொரு துறையாயினும் வர்த்தகம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு விருப்பத்தினை கொண்டவர்களிடத்தே கிராம சேவகர் பிரிவு ஒன்றில் இருந்து ஒருவர் வீதம் இனங்கண்டு புதிய வர்த்தகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்பதும் அவர்களை வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களாக ஆக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களில் பாடசாலையை விட்டு விலகிய 16 - வயதுக்கும் 35 வயதுக்கும் இடையிலான தொழில் வாய்ப்புக்கள் அற்ற இளைஞர்கள் யுவதிகள் தொடர்பில் விஷேட கவனம் ஒன்றினை செலுத்தி பொருத்தமான்வர்களை தெரிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்தெரிவுகளின் போது சம்பிரதாய பூர்வமான சுய தொழில் வாய்ப்புக்களில் இருந்து விலகிய படைப்பாக்கம் உள்ள மற்றும் சுற்றாடல் நேயமிக்க புதிய உற்பத்திகளில் இருந்து உருவான தொழில் முயற்சியாளர் ஒருவராக வர்த்தக உலகில் பிரவேசிக்க விருப்பத்தினை காட்டும் இளைஞர் யுவதிகளை தெரிவு செய்து கொள்வது தொடர்பில் கூடிய கவனத்தினை செலுத்துவது அத்தியாவசியமாகும்.

இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றவர்களை வர்த்தக சங்கங்களுக்கும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளுக்கும் தொடர்புபடுத்துதல் வேண்டும். இவ்வாறானவர்களின் பயிற்சி தேவைகள் மற்றும் குறித்த வழிகாட்டல்களை பிரதேச பயிற்சியாளர்கள் மற்றும் தொழில் முயற்சி ஆலோசகர்களிடம் இருந்து பெற்றுக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப் பயிற்சி வேலைத்திட்டங்களின் பொருட்டு பிரதேச செயலகப் பிரிவு ஒன்றுக்கு 100,000/= ற்கான நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களை தொடர்புபடுத்திக் கொண்டு பயிற்சிபட்டறையினை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடாத்துதல் வேண்டும்.

அதே போன்று பயிற்சியை முடிக்கின்ற தொழில் முயற்சியாளர்களுக்கு வர்த்தகத்தினை ஆரம்பிப்பதற்கு தேவையான மூலதன உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் அடிப்படை

செலவுகளுக்கும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் தொடர்புபடுத்தி மூலதன தேவைப்பாட்டினை வழங்குதல் வேண்டும். அங்கு குறித்த வங்கி முகாமையாளர்கள் நேரடியாக தலையீடு மற்றும் சிபாரிசுகளை இத்தொழில் முயற்சியாளர் தொடர்பில் வைத்துக் கொள்ளல் வேண்டும். சமுர்த்தி வங்கியின் ‘‘சுழற்சி நிதியத்தினை’’ இதன் பொருட்டு விஷேடமாக பயன்படுத்த முடியும்.

பொதுவான ஆலோசனைகள்

01. கருத்திட்டங்களை தெரிவு செய்யும் போது மக்களுக்கு பொருத்தமான விதத்திலும் தொழில் முயற்சியாளரின் வர்க்கத்தின் நிலைபேற்று தன்மை உறுதிப்படுத்தப்படுகின்ற விதத்திலும் பயனாளிகளை தெரிவு செய்து கொள்ள வேண்டியதுடன் அவர் சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர் ஒருவர் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

02. கருத்திட்டத்தில் பொருட்டான சகல கொள்வனவுகள் மற்றும் பிற சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம் மற்றும் பெறுகை செயற்பாடுகளுக்கு ஏற்றதாக மேற்கொள்ளப்பட வேண்டும் என சுட்டிக்காட்டுவதுடன் குறித்த தாபன மற்றும் திணைக்கள விதத்துறைக்கப்பட்ட விலை மனுக்களை கவனத்திள் கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் பயனாளிகளோடு ஒப்பந்தங்களை செய்து கொண்டதன் பின்னர் நிதியை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகப் பொருத்தமானதாக அமையும்.

03. நிர்மாணங்களுக்கு உரியதானதாக ஆரம்பிக்கப்படுகின்ற சகல கருத்திட்டங்களும் இன் நிதியாண்டிற்குள் நிர்மாணித்து முடிக்கப்பட வேண்டியதுடன் எவ் விதத்திலும் கருத்திட்டங்களை குறைவேலையாக வைத்தலாகாது.

04. கருத்திட்ட கன்காணிப்பு, பிண்பனி தொடராய்வு செயற்பாடுகள் உட்பட முன்னேற்ற மீளர்ய்வுகள் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க மட்டத்திலும் பிரதேச செயலக பிரிவு மட்டத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் பொருட்டு பொருத்தமான முறை ஒன்றினை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

05. திறைசேரி நேரடி நிதி ஒதுக்கீட்டின் கீழ் தனிக்கருத்திட்டங்களின் பொருட்டு அங்கீகரிக்கப்படுகின்ற தொகை மீள அறவிடப்படமாட்டாது. கருத்திட்டத்தினை செயற்படுத்தும் போது மேற்சொன்ன கருத்திட்டத்திற்கு உண்மையிலேயே மேற்கொண்ட செலவிற்கேற்ப மாவட்டச் செயலகத்திற்கு 0.5% பிரதேச செயலகத்திற்கு 1.5% மும் என்ற வகையில் நிர்வாகச் செலவு ஒதுக்கப்படுகிறது.

06. பிரதேச மட்டத்தில் இனங்காணப்பட்ட கருத்திட்ட பிரேரணைகளை 01ம் இலக்க இணைப்பு படிவத்திற்கு அமைய தயாரித்து பிரதேச செயலாளரின் இணைப்பு படிவத்திற்கமைய தயாரித்து பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் மாவட்டச் செயளாருக்கு / மாவட்ட சமுர்த்தி பணிப்பாருக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

07. மாவட்ட செயலாளர் / மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரால் அங்கீகரித்த கருத்திட்ட பட்டியலுக்கு தேவையான கட்டுநிதியை இணைப்பு இலக்கம் 2இன் மூலம் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவுக்கு சமர்ப்பித்து கட்டுநிதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

08. ஒவ்வொரு மாதத்தின் இறுதித் திகதியில் தயாரிக்கப்பட்ட மாதாந்த முன்னேற்ற அறிக்கையினை அடுத்துவரும் மாத்தின் 10ம் திகதிக்கு முன்னர் தொழில் முயற்சி அபிவிருத்தி பணிப்பாளருக்கு கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

09. தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 14021 பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டப்பட வேண்டியுள்ளது. ஆகையினால் அந்தந்த வேலைத்திட்டங்களின் பொருட்டு சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் குறிப்பிட்ட பயனாளிகளின் எண்ணிக்கையை தெரிவு செய்து கொள்வது கட்டாயமானதாகும். அத்துடன் திணைக்கள நிதி ஒதுக்கீடுகளுக்கு வரையறையாகாது, சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் கடன் வேலைத்திட்டம் மற்றும் பிற உதவிச் சேவை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சிகள் மற்றும் வசதிகளை வழங்குவதன் ஊடாகவும் பயனாளிகளை வலுவூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

10. தொழில் முயற்சி அபிவிருத்தி / தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஏதேனும் பயனாளி ஒருவரின் பொருட்டு ரூபா 50000/= இற்கான திணைக்கள பங்களிப்பு போதாத விடத்து 50% வீத திணைக்கள பங்களிப்பினை ரூபா 75000/= வரை அதிகரிக்க முடியும் என்பதுடன் அதற்கு மாவட்டச் செயலாளர் / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

11. கருத்திட்டங்களுக்குறிய காட்சி பெயர்ப்பலகைகளை சமுர்த்தி இலட்சிணையுடன் அங்கீகரித்த நிறங்களில் தயாரித்தல் வேண்டும்.

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன.
பணிப்பாளர் தலைமையரதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு - த.கூ.ந. பொருட்டு
2. மேலதிக செயலாளர் (அபிவிருத்தி),
   சமூக வலுவூட்டல் மற்றும நலன்புரி அமைச்சு - த.கூ.ந. பொருட்டு
3. சகல பிரதேச செயலாளர், - த.கூ.ந. பொருட்டு
4. பிரதேச கணக்காளர், - த.கூ.ந. பொருட்டு
5. பிரதான உள்ளகக் கண்க்காய்வாளர், - த.கூ.ந. பொருட்டு
6. சகல பிரிவு தலைவர்கள், - த.கூ.ந. பொருட்டு